

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.7.2025) சென்னை தியாகராயர் நகரில் நடைபெற்ற முரசொலி நாளிதழின் கணக்காளர் திருமதி ஜி.புஷ்பராணி – எல். கிளமெண்ட் ராஜ் தம்பதியினரின் மகன் கி.ஆலன் எட்வின் ராஜ் – ஆ.ரேஷ்மா இணையரின் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு. முரசொலி நாளிதழின் பொதுமேலாளர் எஸ்.ராஜசேகரன் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ அவர்கள் சந்தித்து பேசினார்.

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், கே.எஸ்.மூர்த்தி, எம்.எல்.ஏக்கள் பெ.ராமலிங்கம், கே.பொன்னுசாமி முன்னிலை !

# “ஓரணியில் தமிழ்நாடு” இயக்கத்தில் 6 லட்சம் உறுப்பினர்களைச் சேர்க்க முடிவு!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தகவல்!

நாமக்கல், ஜூலை 4 -

நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்தை மக்களிடத்தில் எடுத்துச் செல்லும் வகையில் திமுக தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தை நேற்று முன்தினம் சென்னையில் துவக்கி வைத்தார்.

இதையடுத்து தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் கிராமப்புறங்களில் உட்பட அனைத்து பகுதிகளிலும் வீடு வீடாக சென்று ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என கூறியுள்ளார்.

அதன்படி தமிழ்நாடு முழுவதும் நேற்று முதல் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் சேர்க்கை நடைபெற்று வருகிறது. ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் குறிப்பாக கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்தில் 6 லட்சம் உறுப்பினர்களை சேர்க்க முடிவு செய்துள்ளதாக நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வலியுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகம் கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் போது ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த பேட்டியின் போது திமுக ஆதி திராவிடர் நலக் குழு மாநிலத் துணைத் தலைவரும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை அமைச்சருமான மருத்துவர் மா. மதிவேந்தன், மேற்கு மாவட்ட திமுக செயலாளர் K.S. மூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் பெ. இராமலிங்கம், கு. பொன்னுசாமி ஆகியோர் உடன் இருந்தனர்.

### நிவேதா எம்.முருகன் தலைமை! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், ஆடுதுறை மு.உத்திராபதி, திருப்பத்தூர் ரஜினி சிறப்புரை!

# மயிலாடுதுறையில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ பொதுக்கூட்டம்!

## குத்தாலம் பி.கல்யாணம், என்.இளையராஜா, மன்னை த.சோழராஜன், மு.தினேஷ்குமார் பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஜூலை 4-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டம் மயிலாடுதுறையில் சின்னக்கடை வீதியில் நடைபெற்றது.

பொதுக் கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் வரவேற்றார். ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், பி.எம். அன்பழகன், எம்.அப்துல்மாலிக், எம்.சங்கர், ஞான. இமையநாதன், மூவலூர் எம்.மூர்த்தி, ஏ.ஜி.ஜெ.பிரபாகர், அமிர்தவிஜயகுமார், கு.வைத்தியநாதன், ஏ.ஆர். ராஜா, மலர்விழிதிருமாவளவன், ம ப.முருகமணி, சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளார்கள் எம். சம்சுதீன், எம்.அன்புச்செழியன், எஸ்.கே.முத்துராஜா, கே. அண்ணாதுரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே. மருது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் பிற்படுத்தப்பேட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தலைமைக் கழக பேச்சாளர்கள் ஆடுதுறை மு.உத்திராபதி, திருப்பத்தூர் ரஜினி, இளம் பேச்சாளர் அ.தீன்ஷாநூப் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தொகுதி பார்வையாளர்கள் மயிலாடுதுறை தொகுதி தாட்கோ தலைவர் என்.இளையராஜா, பூம்புகார் தொகுதி மன்னை த.சோழராஜன், சீர்காழி தொகுதி மு.தினேஷ்குமார்,

தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இராம.இளங்கோவன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னிர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமி நாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், அ. காந்தி, எஸ்.சங்கரநாராயணன், ஜெ.கபிலன், சுபாநெடுஞ்செழியன், நத்தம் ஏ. வின்சென்ட், ஹர்ஷத், பி. கென்னடி, அரசு வழக்கறிஞர்கள் இரா.சேயோன், சி.அருள்தாஸ் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் வி.எஸ்.என்.செந்தில், பெரு.வீரமணி, ஆர். எஸ்.ஸ்ரீதர், ஆர்.சாந்தி, க. அறிவுச்செல்வன், காளி. தேசப்பன், டி.ராஜ்குமார், இரா.மனோகரன், திபா.சத்தியேந்திரன், வி.எஸ்.பிரபாகர், எம்.எஸ்.முத்து குபேந்திரன், எஸ்.எம்.சம்சுதீன், மா.வைத்தியநாதன், வெடி எஸ்.பாலமுருகன், இரா. தனராஜ், இரா.முருகன், இரா.செல்வராஜ், கே.விக்னேஷ், முன்னாள் ஒன்றியக் குழு தலைவர்கள் எம்.மகேந்திரன், ஜெயபிரகாஷ் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், நகர்மன்ற, பேரூராட்சி மன்ற துணை த்தலைவர், உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட துணைச் செயலாளர் மு. ஞானவேலன் நன்றி கூறினார்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ விளக்க பிரமாண்ட பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கிருஷ்ணகிரி, ஜூலை 4 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக மத்தூர் பேருந்து நிலையம் அருகே ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை தொடர்பான விளக்க பிரமாண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த பொதுக் கூட்டத்திற்கு மத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் குண. வசந்தரசு தலைமை தாங்கினார்

ஒன்றிய செயலாளர்கள் சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், மகேந்திரன், அறிஞர், எக்கூர் செல்வம், குமரேசன், ரஜினி செல்வம், தேங்காய் சுப்பிரமணி, தனசேகரன், சரவணன் கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கட்டப்பன் பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித் ஒன்றிய அவைத் தலைவர் பாலசுப்பிரமணியம, ஒன்றிய துணை செயலாளர்கள் ஜீவானந்தம், மூர்த்தி, மலர்க்கொடி இமயவேல் மணி, அன்பழகன், லதா ரவி, பொருளாளர்கள் பெருமாள், வீரபத்திரன், மாவட்ட பிரதிநிதிகள் கோவிந்தராஜ், சாந்தமூர்த்தி, சுப்பிரமணி, லட்சுமி காந்தன், வாசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன், கழக இளம் பேச்சாளர்கள் ஆனந்தஷைனி, பவித்ரா உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினார்கள். இந்த கூட்டத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமாகு தளபதியார் அவர்களின் தலைமையிலான திராவிட மடல் ஆட்சியில் கடைக்கோடி மக்களும் பயன் பெரும் வகையில் செய்து கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு நல திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துக்கூற வேண்டும். குறிப்பாக அரசு பேருந்துகளில் மகளிர் இலவச பேருந்து பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம், பள்ளி மாணவ, மாணவிகள் பயன் பெறும் வகையில் காலை சிற்றுண்டி திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், கல்லூரி மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையிலான புதுமைப்பெண் / தமிழ்ப்புதல்வன் உள்ளிட்ட மக்கள் நல திட்டங்களை கழக நிர்வாகிகள் பொதுமக்களை வீடு, வீடாகச் நேரில் சென்று திட்டங்களை எடுத்துரைக்க வேண்டும் என சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர் டாக்டர் மாலதி நாராயணசாமி, ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர் ரமேஷ், பர்கூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் முனிவேல், கிருஷ்ணகிரி தொகுதி தேர்தல் பார்வையாளர் தேவகுமார்,

மாநில வர்த்தக அணை துணை செயலாளர் அன்பரசன், கிழக்கு மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, பொருளாளர் கதிரவன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தினேஷ் ராஜன், ஜெயந்திரன், விஜய் ராஜசேகர், இளையராஜா, காந்தி, சங்கர், ஜீவானந்தம், அம்மன் ராஜா, சத்திய நாராயணமூர்த்தி, நேதாஜி மற்றும் ஒன்றிய ,நகர, பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், BLA 2, BLC, தோழர்கள் கிளை கழக நிர்வாகிகள் முன்னாள், ம/ இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் பெண்கள் ஏராளமானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பொதுக்குழு உறுப்பினர் கோதண்டன் நன்றியுரை ஆற்றினார்.



குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நேற்று முன்தினம் (2/7/2025) சென்னை நந்தனம் Startup TN அலுவலகத்தில், அக்டோபர் மாதம் 9, 10 ஆகிய நாட்களில் கோயமுத்தூரில் நடைபெறும் உலக புத்தொழில் மாநாடு 2025 முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் MSME அரசு செயலாளர் அதுல் ஆனந்த், Startup TN நிறுவனத்தின் செயல் அலுவலர் சிவராஜ் ராமநாதன் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தின் கீழ் மணப்பாறை நகரத்திற்குட்பட்ட இராமலிங்கம் நகர் 7வது வார்டில் உள்ள வீடுகளுக்குச் சென்று ஒன்றிய அரசின் வஞ்சகத்தையும், திராவிட மாடல் அரசின் திட்டங்களையும் எடுத்துரைத்து உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டார். இந்நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் கோவிந்தராஜ், நகரக் கழகச் செயலாளர் மு.ம.செல்வம், தொகுதி பார்வையாளர் அண்ணாமலை கலந்து கொண்டார்கள்.




தி.மு.க. இளைஞர் அணி

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 05.07.2025 சனிக்கிழமை | காலை 09.30 மணி | திண்டுக்கல் கிழக்கு | ஏ.எம்.எஸ்.மஹால், தாடிக்கொம்பு சாலை, திண்டுக்கல். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 02.07.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி.